# 18. STREET LIGHTS

## 18.7 2000–01–ஆம் ஆண்டில் தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைத்தல், மின்விளக்குகள் பொருத்துதல் மற்றும் சோடியம்–பாதரசம் ஆவி விளக்குகளாக மாற்றம் செய்தல்

ஊரக வளர்ச்சி ( தி 3) துறை

அரசாணை ( நிலை) எண். 62 நாள் : 28. 2.2001

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 275ஊரக வளர்ச்சி (தி3) துறை நாள் 28.12.1999.
2. தமிழ்நாடு மின்சார வாரிய உறுப்பினர் (பகிர்மானம்) சென்னை அவர்களின் கடித எண் SE/RE&I (D)/RE II / F. ST. LT. Village Panchayats/D.No.274/2000.நாள் 10.3.2000 மற்றும் 3.5.2000.

ஆணை

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஏனையவைகளோடு 1999–2000–ம் ஆண்டிற்கு மாநிலத்திலுள்ள கிராம ஊராட்சிகளில் ஒரு தெரு விளக்கு அமைக்க ஆகும் சராசரி செலவு ரூ 7800/– என நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும், ஏற்கனவே உள்ள குழல் விளக்குகளை சோடியம்/பாதரசம் ஆவி விளக்குகளாக மாற்றம் செய்ய ரூ.550/– என நிர்ணயம் செய்யப்பட்டது, ஆனால் அவ்வாறு மாற்றும் பொழுது மின்விளக்கு பொருத்திகளை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மின்சார வாரியத்திற்கு வழங்கவேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

2. படிக்கப்பட்ட 2–ல் காணும் கடிதத்தில், மின்சார வாரிய உறுப்பினர் (பகிர்மானம்) அவர்கள் 2000–2001–ம் ஆண்டிற்கு தெருவிளக்குகள் அமைப்பது தொடர்பாக கீழ்கண்டவாறு ஆணை வெளியிடுமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

1. 1999–2000–ம் ஆண்டிற்கு கிராம ஊராட்சிகளில் ஒரு தெரு விளக்கு அமைக்க ஆகும் சராசரிய செலவினமாக நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.7800/– யே 2000–2001–ம் ஆண்டிற்கும் நிர்ணயம் செய்யலாம்.
2. ஏற்கனவே உள்ள குழல்விளக்குகளை சோடியம்/பாதரசம் ஆவி விளக்குகளாக மாற்றம் செய்ய 2000–2001–ம் ஆண்டிற்கு ரூ,600/– என தொகையினை நிர்ணயம் செய்யலாம், ஆனால் சோடியம் /பாதரச ஆவி விளக்கு மற்றும் இதற்கான பொருத்திகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் வழங்க வேண்டும்.
3. பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பின்பற்றப்படுவது போல் உள்ளாட்சி அமைப்புகளிலும் பொருத்திகள் இல்லாத தெரு விளக்குக் கம்பங்களில் பாதரச ஆவி விளக்குகள் அமைப்பதற்கு ரூ.7440/– என நிர்ணயம் செய்யலாம், (ரூ 7800– ரூ 360 அதாவது தெருவிளக்கு உபகரணங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்ட தொகை) மேற்படி நிர்ணயிக்கப்பட்ட தொகையினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டும்.

3. மேற்காணம் தமிழ்நாடு மின்சாரவாரிய உறுப்பினரின் அறிக்கையினை அரசு பரிசிலித்து கீழ்கண்ட வாறு முடிவெடுத்து ஆணை பிறப்பிக்கின்றது.

1. 2000–2001–ம் ஆண்டிற்கு கிராம ஊராட்சிகளில் ஒரு தெரு விளக்கு அமைக்க ஆகும் சராசரி செலவினம் ரூ.7800/– என நிர்ணயம் செய்யப்படுகிறது.
2. ஏற்கனவே உள்ள குழல்விளக்குகளை சோடியம் / பாதரசம் ஆவி விளக்குகளாக மாற்றம் செய்ய 2000–2001–ம் ஆண்டிற்கு ரூ,600/– என நிர்ணையம் செய்யப்படுகிறது. ஆனால் சோடியம்/பாதரசம் ஆவி விளக்கு மற்றும் இதற்கான பொருத்திகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் வழங்க வேண்டும்.
3. கிராம ஊராட்சிகளில் பொருத்திகள் இல்லாத தெரு விளக்கு கம்பங்களில் பாதரச ஆவி விளக்குகள் அமைப்பதற்கு ரூ.7440/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. (ரூ 7800– ரூ 360 அதாவது தெருவிளக்கு உபகரணங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்ட தொகை) மேற்படி நிர்ணயிக்கப்பட்ட தொகையினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டும்.
4. இவ்வானை எரிசக்தி துறையின் அ.சா.கு.எண் 8469/சி3/2000, நாள் 5.9.2000 மற்றும் நிதி துறையின் அ,சா,கு,எண் 15403/ஊ,வ/2000–2001 நாள் 27.2.2001–ன் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**

அரசு செயலாளர்